உ
சிவமயம்

REGISTERED AS A NEWS PAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ச் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ௬௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு மாசி மீ ௧௨ (1948 பிப்ரவரி 13 வெள்ளிக்கிழமை) [இல ௮௫

# பரமனை அறிவிக்கும் பக்தி நூல்கள்

## யாக்கைப் பயன் எது?

### வாயால் வாழ்த்தி, நெஞ்சால் நினைமின்!

( R. பஞ்சநதம்பிள்ளை )

மனிதப் பிறவி அருமையாய்க் கிடைத்துள்ளது. 'வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்' என்று அப்பர் கூறுகின்றார். இறைபணிசெய்வதற்கே உடலைத் தந்துள்ளான் இறைவன். 'வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை' என்று நாவரசர் கூறுகின்றார். 'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்' என்று ஔவையார் கூறுகின்றார்; மனிதனிடத்தில் மறைந்துகிடக்கும் தெய்வீக சக்தியை வழிபாடுகளால் விளங்கச்செய்வதே மனிதவாழ்க்கையின் சிறந்த பயனாகின்றது.

இறைவனை மனம் மொழி மெய்களால் வழிபடுவர். மன வழிபாடும் மெய்வழிபாடும் தமக்குமட்டும்பயன்படும். மொழி வழிபாடு — வாய்ப்பணி தமக்கும் பிறருக்கும் பயன்படும். வீட்டின் வாயிலில் வைத்த விளக்கு வீட்டின் உள்ளும் புறமும் வெளிச்சம் தருவதுபோல, உடம்பென்னும் மனையின் வாயில்போன்ற வாயினால் செய்யும் வழிபாடு தனக்கும் பிறருக்கும் நன்மைதருவதாகும். வாய்த்தொண்டு என்பது இறைவனை வாயால் புகழ்வதும், அவன் திருநாமங்களை நாவால் நவில்வதுமாகும். ஆலயங்களில் கோபுர வாயிலின்வழியே பெருமாள் வெளிப்படுவதுபோல உடம்பென்னும் கோயிலுக்கு வாய் கோபுர வாயிலாக அமைந்துள்ளது. 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம், வள்ளற்பிரானுக்கு வாய் கோபுரவாசல்' என்று திருமூலர்கூறுகிறார். இதனைக்கார்த்திகை மாதத்தில் வீட்டுவாயில்களில் விளக்குகளைநிறைய ஏற்றிவைத்து விளக்கப்படுத்துகிறார்கள்.

இயற்கைப் பொருள்களில் அஃறிணைப் பொருள்களும் வாய்திறந்து இயற்கைவடிவான இறைவனை வழிபடுகின்றன. வண்டுகள் வாய்திறந்து பாடுகின்றன. 'பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்' என்கின்றார் அப்பர் சுவாமிகள். மலர்களும் அவ்வப்போது இதழ்களைத் திறந்து மணந் தருகின்றன. காலைக் கதிரவனைக் கண்டு கமலமலரும், மாலை மதியத்தைக் கண்டு குவளையும் வாய்திறக்கின்றது. மார்கழி மாதத்தில் விடியற் காலத்தில் ஆலயங்களிலும் இல்லங்களிலும் வாயில்கள் திறக்கப்படுகின்றன. 'வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்' என்று திருவெம்பாவை கூறுகின்றது.

அஃறிணைப் பொருள்களில் சிலந்தியும்வாயினால் நூல்நூற்கின்றது, ஆனைக்கா என்னும் ஆலயத்தில் சிலந்தி நூற்பந்தல் அமைத்துப் பெருமானுக்கு நிழலிட்டு வழிபட்டது. பெருமான் அதன் தொண்டுக்கு மகிழ்ந்து மறுபிறப்பில் மன்னனாய்ப் பிறக்கச் செய்தான். 'சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தல்செய்து உலந்தவன் இறந்தபோதே கோட்செங்கணானுமாக—பிறப்பித்திட்டார்' என்று அப்பர் கூறுகின்றார். ஒருவகையில் மனிதனும் சிலந்திக்கு ஒப்பாவான். சிலந்தி வாயால்நூற்று அதில் வசிக்கிறது. மனிதனும் தான் விரும்பும் பாசங்களின் தொடர்பில் சிக்கி அதன் வலையில் அகப்பட்டுக்கொள்கிறான். 'நுண்ணூல் நூற்றுத் தன்னகப்படுக்கும் அறிவில் கீடத்து நுந்துழிப்போல ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு' என்று பட்டினத்தடிகள் கூறுகின்றார். ஆசையற்றபோது ஞானம் பிறக்கின்றது. 'ஆசாநிகளம் துகளாயினபின் பேசா அனுபூதிபிறந்ததுவே' என்று அனுபூதி கூறுகிறது. சிலந்தி வாயால் நூற்று சிவத்தொண்டு செய்ததுபோல, ஆறறிவு படைத்த மனிதனும் நூல்தொண்டு செய்யவேண்டும். 'நூலால் நன்றாய்நினைமின்கள்' என்று அப்பர் கூறுகின்றார். நூல்தொண்டு என்பது பெருமானைப் புகழும் வகையில் ஏதேனும் ஓர் நூலை—பிரபந்தத்தைச் செய்வது, அல்லது ஆன்றோர்கள் இயற்றிய ஞான நூல்களைக் கற்பதும் கேட்பதும ஆகும். தற்போது நாட்டை வாயிலாக நூல்நூற்பதையும் காண்கிறோம். பஞ்சின் நூலானது பருப்பொருள்களின் புறக்கோணலைப் போக்குவதுபோல, ஞான நூல்கள் மனிதரின் மனக்கோணலை மனமாசுகளைப் போக்கும்,

பொதுவாக நூல்கள் பதிநூல், பசுநூல், பாசநூல் என மூன்றுவகைப்படும். பசுநூல் என்பன சரித்திர வரலாறுகள். பாசநூல் என்பன உலகப் பொருளகளைப் பற்றிக் கூறுபவை. இவை இம்மைப்பயன்களைத் தரலாம். பதிநூல் என்பன— இறைவனைப் பற்றிய வேதாகமம் முதலியவை. 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்று திருமந்திரம் கூறுகின்றது. இவை இம்மை மறுமைப்பயன்களைத் தரும். ஆகவே பதி நூல்களைக் கொண்டு வாயினால் வாழ்த்த வேண்டும். நுண்மைப் பொருளகள் கண்ணாடியால் பருமையாகக்காணப்படுவதுபோலப் பெருமானும் பதிநூல்களால் விளங்கித் தோன்றுவான்.

அப்பர் சுவாமிகள் 'கற்றுக்கொள்வன வாயுள நாவுள' என்கிறார். அவை தோத்திரமும் மந்திரமும ஆகும். வாயினால் துதிக்கத்தக்கவை தோத்திர நூல்கள். அவை தேவாரம் முதலிய திருமுறைகளாகும். நாவினால் நவிலத்தக்கவை மந்திரங்கள். தோத்திரங்களை வாய்விட்டுச்சொல்லவேண்டும். மந்திரங்களை மோன நிலையில் உச்சரிக்கவேண்டும். தோத்திரங்களால் சொல்பவருக்கும் கேட்பவருக்

தொடர்ச்சி 6 ம் பக்கம்

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமைசொல்லிக்
கல்லி னூலெறிந் திட்டு மோதியுங் கூறைகொள் ளுமிடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டிமா நகர்வாய்
எல்லைக் காப்பதொன் றில்லையாகில்நீர் எத்துக்கிங்கிருந்தீ ரெம்பிரானிரே
—சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

## இயற்கை

(சே வெ ஜம்புலிங்கப்பிள்ளை)

இவ்வுலகத்திலே யுண்டாகும் நிகழ்ச்சிகளை யாம் "இயற்கை" என்று கூறுகின்றோம். இவ்வியற்கை யாதென்று ஆராயின் உலகத்தை இயக்குவதற்காகக் கடவுளால் நிறுவப்பட்ட திருவருளின் ஆணையே என்பது புலப்படும். ஒரு அரசாட்சியைச் சேர்ந்த குடிகளெல்லாம ஒரு பிரமாணத்தை அனுசரித்து ஒழுகுவாராயின் அந்தப் பிரமாணத்தைக்கொண்ட அரசொன் றுண்டென்பது எவரும அறியத்தக்கது. அந்த அரசைப் பிரத்தியட்சக் காட்சிகொண்டு யாம் காணுதவிடத்தும் இந்த அனுமானம எல்லாரறிவினும் வந்து உறைக்கும். இங்ஙனமே உலகில் நிகழும் இயற்கை மரபை நாம் காணும்போது அம்மரபுக்குக் காரணனாகிய இறைவனொருவனுளன் என்பது பிறசாட்சியம் வேண்டாது இனிது புலப்படும்.

இனி யாம் பிரபஞ்சமாகிய காரியத்தைக்கண்டு இதனுக்குக் காரணனாகிய இறைவனொருவன் உளன் என்று நிச்சயிப்பதும் உலகத்தின் செரூபத்தை ஆராய்ந்து இது இறைவனையின்றி அமையாதென்று நிச்சயிப்பதும் பிறவுமாகிய தருக்க சம்பிரதாயத் துணிபுகளெல்லாம் இறைவனை நாம் வெகுதூரத்திற் காணும் படர்க்கைக் காட்சிகள் எனப்படும். உலகத்திற் காணப்படும் சித்திவினோதங்களையும் இறைவனது கட்டளைப்படி ஒழுகுவார் அடையும் பயன்களையும் யாம் காணுமிடத்து இறைவனை யாம் அண்மையாகக் காணுமகாட்சி முன்னிலைக்காட்சி யெனப்படும். இனி அவ்விறைவனது திருவருட் பிரசாதத்தை நாமே சுவைத்து அவனது பேரொளி விளக்கத்தை எம்முட் காணும காட்சி தன்மைக்காட்சி எனப்படும். இம் முத்திறக்காட்சிகளிலும முன்னையஇரண்டு எமது அறிவு வாயிலாக விளக்கமுறுவனவாகும். மூன்றாவதாகிய தன்மைக்காட்சி சுவானுபவவாயிலாக விளக்கமுறுவதாகும், இவ்வனுபவக்காட்சி மெய்யறிவுடைய ஞானிகளுக்கன்றி ஏனையோருக்குச் சிந்திக்கத்தக்கதன்று. மற்றிரண்டு காட்சிகளுமே சாமானியர்களுக்குச் சிந்திக்கற்பாலன, முன்னிலைக்காட்சியால் இறைவனைக் காணும முறையினை ஆராய்வோம்.

கடவுள் நமது காட்சிக்கு அரியனாதலின் அவனைக்காணும் முறை காணும் விளக்குதற்கு அரியது; அதனை யாம் கூரிய மதிகொண்டு நுணுகி நோக்கினாலன்றி எமக்குப் புலப்படாது. அப்புலப்பாடும் சித்தத்திற்குரிய பக்குவம் அமைந்திருந்தாலன்றி அமையாது இவ்வுலகினில் சடமுஞ் சித்தும் கலந்துள்ள தோற்றங்களை யெடுத்து நாம் நுணுகி ஆராய்வோமாயின் இவற்றின்கண்ணே சட இயல்பும் சித்தியல்பும் இவ்விரண்டின் கலப்பினாலாய சம்பந்த இயல்பும் நமக்கு நன்கு புலப்படும். சட இயல்புடையதே உடம்பென்றும், சித்தியல்புடையதே உயிரென்றும் இவற்றின் சம்பந்த இயல்பே சீவன் என்றும் சமய சாத்திரங்களிற் கூறப்படும். ஆன்ம சம்பந்தம்பற்றியே சீவாற்றல் தோன்றுவதை அச்சீவ ஆற்றலை ஏதேனும் பௌதிக மரபால் பிறப்பித்தல் கூடாமை கொண்டு இனிது காணலாம். இனிச் சடமும் சித்துமாகிய பொருட்டிறங்கண்டு இரண்டு உளவாய வழியும், இவற்றைக் கலப்புறச் செய்தலும் கலப்புறுத்தி அச்சீவ ஆற்றலைத் தோற்றுவிக்கும் பெரு விநோதத்தைச் செய்தலும எல்லாம்வல்ல சித்தனாலன்றி முடியா என்பதும நன்கு புலப்படும். உலகத்திலே கோடானுகோடி வேறுபாடுகளையுடைய சீவகோடிகளை யாம் எப்போதும் காண்பதால் இப்படி வேறுபட்ட சீவர்களை யெல்லாம் அவ்வவர் தகுதிக்கமைந்த சீவசம்பந்த முற்றுத் தோன்றும்படி செய்தவனாகிய சாமர்த்தியசாலி ஒருவன் உளனென்பது நாட்டப்படும. இவனே விச்சின்றி நாறுசெய்த பரமபதி.

சடப்பொருள்களின் கண்ணே சீவசத்துச் சிறிதுமில்லை யென்பது பௌதிக சாத்திர முடிபாதலால் இச்சீவ சத்துக்குக் காரணமாவதோர் சித்துப்பொருள் சடங்கள்தோறும் உண்டென்பதும் அச்சித்துப் பொருள்களை யெல்லாம அவ்வவர் தகுதிக்கு அடைந்த தனுகரண புவனங்களிற் செலுத்தி அவ்வவர்க்கியன்ற போகங்களை ஊட்டும் பரமசித் சொரூபி ஒருவன் உளான் என்பதும் தெள்ளிதிற் புலப்படும். உலகத்திலே பலவேறுவகைப்பட்ட திரவியங்களும் அவற்றின் வேற்றுமைக்குக் காரணமாகிய பலவேறுவகைப்பட்ட குணங்களும் உளவாயினும், இவ்வேற்றுமைப் பொருள்களெல்லாம ஒருங்கு கூடித் தொழிற்படுதல் காணப்படுத

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு.
மாசி மீ கஉ வெள்ளிக்கிழமை

## யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு நீர் வழங்குதல் நிகழுமா?

இந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலே சிற்சில விடங்களிலொழிய, பல இடங்களிலே விசேஷமாகப் பறங்கித்தெரு நாவாந்துறை முதலிய பகுதிகளிலே மக்கள் குடித்தற்பொருட்டும் சமையல் முதலியனவற்றில் உபயோகஞ்செய்யும்பொருட்டும் நல்ல தண்ணீர் அகப்படாமையால், யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு, கொழும்பு கண்டி முதலாஞ் சில நகரங்களிற் செய்துவருதல்போல, நல்ல தண்ணீர் வழங்கப்படுதல்வேண்டு மென்ற நோக்கம் பல வருடங்களாக அதிகாரிகளிடத்தி லுள்ளது; இப்பட்டினவாசிகளும் அப்படி வழங்கப்படுமெனப் பல வருடங்களாக எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றனர்; இதனை விரைவிற் செய்யவேண்டு மென்ற நோக்கத்தோடு இருந்தவர் இங்குள்ள பகிரங்கவேலைப் பகுதித் தலைமை யுத்தியோகத்தருள் ஒருவராகிய திரு. S. மகாதேவா அவர்களாவர்; அவருடைய அகால மரணங் காரணமாக அவர்கொண்ட இப்படியான சில நோக்கங்களும் முயற்சிகளும் பின்போடப்படலாயின வெனலாம்.

ஆனால் இப் பட்டினத்திற்கு நன்னீர் வழங்கும் நோக்கமும் முயற்சியும் இப்பொழுது சோர்வடைகின்றனவோ வெனச் சந்தேகப்படக்கிடக்கின்றது; இப்பொழுதுள்ள பகிரங்க வேலைக் கமிஷனர்ஸ்தல பரிபாலனப்பகுதியாருக்கு இவ்விஷயமாக எழுதும்போது, யாழ்ப்பாணப்பட்டினத்தில் இப்பொழுதுள்ள பட்டின வாசிகளின் தொகையை நோக்குமிடத்து இப்பட்டினத்திற்கு நன்னீர் உதவுகல் அசாத்திய மென்னுங் கருத்துப்படத் தெரிவிக்கின்றார்; இப் பட்டினத்தில், கான்கள் மல கூடங்கள் முதலியவற்றை நாள்தோறுங் கழுவிச் சுத்தஞ் செய்தற்கு வேண்டிய தண்ணீரையுஞ் சேர்த்து நாளொன்றுக்கு 1400000 கலன் கொண்டதண்ணீர் வேணுமென்றும், அதனைத் தவிர்த்து பட்டின வாசிகளின் ஸ்நானம் சமையல் பானம் முதலியவற்றிற்கு மாத்திரம் வழங்குதற்கு 940, 00 கலன்கொண்ட நீர் வேணுமென்றும், ஆனல் இவ்வளவுதொகையான சுத்தநீரை இப்பொழுது தருவித்தற்காகிய நல்லநீர்நிலை சமீபத்தி லில்லையெனவும் மேற்படி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இவை மாத்திரமல்ல, முன்னர் மேற்படி திரு. S. மகாதேவா இட்ட திட்டத்தின்படி 560000 கலன் கொண்ட நீரைத்தானும் இப்பட்டினத்திற்கு இப்பொழுது வழங்குதல் இயலாத காரியமென்றுமகுறித்த விசாரணையுத்தியோகத்தர் கூறுகின்றார்; இன்னும் இப்படியான இடையூறுகள் பலவுண்டெனை மேற்படி உத்தியோகத்தர் சாதிக்கின்றார்.

இது இங்ஙனமாக, இப்பொழுது பட்டினசங்கபரிபாலனத்திலிருக்கும இந்த யாழ்ப்பாணப் பட்டினத்தை, கொழும்பு கண்டி முதலிய நகரங்களின பரிபாலனம்போல, அடுத்த ஆண்டில் நகர பரிபாலத்துள் ஆக்கவேண்டுமென்ற நோக்கமும் தீர்மானமும் ஸ்தல பரிபாலனப் பகுதியாரிடத்துள் இற்றைக்குப் பல ஆண்டுகட்கு முந்தியே பிறந்துள்ளன; யாழ்ப்பாணப் பட்டினம் இப்பொழுது இருக்கும் முறையும் வெளிச்சம் மின்சார அலை என்னுமிவற்றின் நிலைமையும் பட்டினசங்கத்தின் பரிபாலனத்திற்குத்தானுங் குறைந்த நிலையி லிருக்கின்றன; இப்படியிருக்க இப் பட்டினத்தில் மேலே சொல்லப்பட்ட தண்ணீர்ச் சௌகரியங்கள், இரவிலே தவறுதலில்லாத வெளிச்சம் அல்லும் பகலும் வேலைசெய்யக்கூடிய மின்சாரஅலையென்னுமிவைகளைச் சீர்ப்படுத்தாமல் இப்பட்டினத்தை நகரசங்கப் பரிபாலனத்தில் வைத்தல் பட்டினவாசிகளை ஏமாற்றுவதோடு நகர பரிபாலன மென்ற முறையிற் பட்டினவாசிகளிடத்து மேலதிகமான வரிகளை அறவிட்டு அவர்களைக் கஷ்டப்படுத்துவதுமாக முடியுமென அஞ்சுகின்றேம்.

### இந்தியாவுக்கு மணிஓடர்

இம்மாதம் 16-ம் திகதிக்கும் 23ம் திகதிக்குமிடையிலுள்ள ஒருவாரத்தில் இங்குள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் சாதாரண மணிஓடர் மூலமாகவும் தந்தி மணியார்டர் மூலமாகவும் எவ்வளவுதொகை இந்தியாவுக்கு அனுப்பப்படுகிறது. இந்த விபரத்தை அறிவிக்குமாறு இலங்கை முழுவதிலுமுள்ள தபாற்கந்தோர்களுக்கு பெரிய தபாற்கந்தோர்மணியார்டர்இலாகா ஒரு சுற்றறிக்கையை அனுப்பிவைத்திருக்கிறது. இலங்கை இந்தியர்கள் இந்தியாவுக்கு எவ்வளவு பணம் அனுப்புகிறார்களென்பதை உத்தேசமாகக் கணக்கெடுப்பதற்காகவே இந்தச் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### தேகவியோகம்

**சின்னப்பிள்ளையம்மையார்**

மண்டைதீவு பிரபல தனவந்தராக இருந்த ஸ்ரீ சு. கணபதிப்பிள்ளையவர்களின் பாரியாரும், அவ்வூர்க் கிராமச்சங்கத்தலைவர் ஸ்ரீ கைலாசபிள்ளையவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி சின்னப்பிள்ளையம்மையார் தம்மைச் சிலகாலமாகப் பிடித்த நோய் காரணமாக சென்ற திங்கட்கிழமை 9-2-48 இரவு காலமானார். அவரது ஈமக்கிரியைகள் அடுத்தநாள் திரு. க. கைலாசபிள்ளை திரு. கனகரத்தினம் ஆகிய இரு புத்திரர்களாலும் செய்யப்பட்டன. யாழ்ப்பாணப் பிரிவு விவாகப்பதிவுகாரியஸ்தர் திரு. சி. பசுபதிச் செட்டியாருடைய பாரியார் நாகலட்சுமியம்மாவும், கிளிநொச்சி அரசினர் வைத்திய 'அப்போதிக்கரி' (Apothecary) உத்தியோகத்தராயிருக்கும திரு. ச. சோமசுந்தரமவர்களின் பாரியார் இராசலட்சுமியும் இவ[illegible] இவவுடைய ஆன்[illegible]

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—51)

### "எந்தப்புற்றில் எந்தப் பாம்புண்டோ"

விவாகம் நிறைவேறியபின் இரண்டுதினம் மணமக்கள் வீட்டிலே தங்கியிருந்த புரோகிதரும் மணமகளோடு வந்தவர்களும் தத்தம் ஊருக்கு மீண்டார்கள்; விவாகம் நிறைவேறிச் சிலநாட் சென்றபின் ஒருநாள் நமசிவாயமும் சிவபாக்கியமும அன்புடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது, சடுதியிற் சிவபாக்கியஞ் சிறிது கவலையோடு காணப்பட்டாள்; அதனை அவதானித்த நமசிவாயம் "என்னமுகவாட்டம்" என்று அன்புடன் கேட்க. "ஒன்றுமில்லை, எங்களுக்கு விவாகம் நடந்த சமயத்தில், எங்கள் சாமியார் சமுகஞ் செய்யவில்லையே யென்பதையிட்டுத்தான் சிந்திக்கிறேன்" எனலும், விசுவநாதன் சிரித்தான்; 'ஏன் சிரிக்கிறீர்கள், நான் சொன்னதில் ஏதுந் தவறுண்டோ" என்றுஊடினாள் சிவபாக்கியம்; "மங்கலகருமம் நடக்கும் நேரத்திலே ஆண்டி பரதேசிகளுடைய சமுகம் ஆகாதென்றல்லவா, கண்ணே, சொல்வார்கள்; ஆனதால் அவர் அந்த மங்கல வேளையில் இல்லாமற்போனது நல்லதென்றல்லவா நான் நினைக்கிறேன்" என்றான் கணவன்; "அங்கள் சாமியாரை ஆண்டி யென்றும் பரதேசியென்றும் நாங்கள் எண்ணுவது சரியல்ல, பாருங்கள், அவரை நாங்கள் எங்கள் குரு என்று மதித்திருக்கிறோம்; அவர் அறிவுடையவர், ஒழுக்கமுடையவர், தெய்வசிந்தனை யுடையவர்; தீர்த்தயாத்திரை தலயாத்திரை செய்பவர்; எங்களிடத்து நல்ல அன்புடையவர்; அவருடைய உபதேசத்தைக் கேட்டு நடந்தால் நாங்கள் நல்லாய் வாழலாம்; நீங்கள் அவருடன் இன்னமும் ஊடாடவில்லை; ஊடாடத் தொடங்கினால், பின்பு அவர் போன்ற பெரியாருடைய பிரிவு கவலையைத்தரும" என்று அன்புகூரச் சொன்னாள காதலி "அப்படியா! அவருடைய பெருமையை நான் முந்தியறியேன்; அவர் இல்லறத்திலிருந்து பின் துறவியானவரா? இல்லையேல் இல்லறததிற் புகாது துறவியானவரா? தனபாக்கியம் அவருடைய சொந்தமகளல்லவா" என்று வினவினான் கணவன்; "அவர் இல்லறத்திற் புகாமலே துறவியானவராம்; தங்கைச்சி தனபாக்கியம் அவருடைய சுவீகார புத்திரியாம்" என்றாள் வாழ்க்கைத் துணைவி; "என் அன்பே, சொல்லுகிறே னென்று கவலைப்படவேண்டாம், இந்தக்காலத்திற் காணப்படும் சுவாமிகள் சந்நியாசிகள் துறவிகளில் எனக்கு அதிக நம்பிக்கையில்லை; இவர்கள் ஒவ்வொரு நோக்கம்பற்றித் துறவிகளென்றுஞ் சாமிகளென்றுஞ் சந்நியாசிகளென்றுஞ் சஞ்சரிக்கிறார்களென்பதுதான் எனது கொள்கை; எந்தப்புற்றில் எந்தப் பாம்பிருக்கிறதோ, ஆர் அறிவார்" என்றான் நமசிவாயம்; கேட்ட சிவபாக்கியத்தின் முகத்திற் சிறிது வாட்டங் காணப்பட்டதே யல்லாமல், அவளுடைய வாயிலிருந்து ஏதும் பதில் பிறந்திலது.

### 'பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்"

தான் சொன்னவார்த்தை தன் காதலியின் உள்ளத்தைப் புண்படுததிவிட்டதென வுணர்ந்த கணவன் அவளை அன்புடன் பார்த்து "ஏன் பேசாதிருக்கின்றீர், என்னுடன் கோபமா" என்று இதமுறக் கேட்டான்; கோபமுமில்லை, மனவாட்டமுமில்லை, 'பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருததல்' என்று கனிவுறப் பன்னி[illegible] காதலி. '[illegible]தல்லவே, அபிப்பிராயபேதந்தானே, நீரும் உம்முடைய எண்ணத்தைச்சொல்லலாமே" என்று கணவன் இதமுறக்கூற "உங்களுக்கும் எனக்குமிடையில் அபிப்பிராயபேத மில்லையே, இனிமேல் எனக்கென்று தனியேயொரு அபிப்பிராயமுண்டோ" என்றாள் இல்லக்கிழத்தி. "கண்ணே, உம்முடைய அபிப்பிராயமும் எம்முடைய அபிப்பிராயமும் ஒன்றாயின், நீர் பேசுவனவையும் எதிர்பேசுவனவாகா; ஆதலால் உமது எண்ணத்தைக் கூசாமற் பேசும்" என்றான் நமசிவாயம்; "வேறொன்றுமல்ல, பாருங்கள், சிலர் போலித் துறவிகளாய்ச் சந்நியாசிகளாய்ச் சாமிகளாய்நடித்தனரென்ற காரணத்தினுல், துறவிகள் பெரியார் எல்லாரையும் நாம் விபரீதமாக எண்ணிவிட வொண்ணுதென நினைக்கிறேன்; போலிவேடம்பூண்டவரிடத்தும், நாம் உண்மையான பெரியாரென்றெண்ணி விசுவாசத்தோடுநடந்தாற் சிலவேளை, அந்தப் போலிப் பெரியாரும் தம்மேல் மக்கள் வைக்கும் மதிப்போடு கூடிய நம்பிக்கையையுணர்ந்து உண்மையான பெரியாராய்த் திருந்துதலுங்கூடுமென்று சொல்லி, அரசனுய்வருதற்கு ஆண்டி வேடம் பூண்ட ஒருவன் பின்னர் அந்த அரசபதவியை வெறுத்து உண்மைத் துறவியான கதையுஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன், நீங்கள் அறியாததல்ல" என்றாள் சிவபாக்கியம்; "என்பாக்கியமே, அக்கதையை நான் அறியேன், சொல்லும்" என்று ஆர்வத்துடன் நாயகன் கேட்க, நாயகி சொல்லுவாளாயினள்:-

### "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதுண்டோ"

"புத்திரப்பேறில்லாத அரசனொருவன் தன் அந்தியகாலத்தில் தன்னுடைய மந்திரிமாரை விளித்து "மதி மந்திரிகளே, சந்ததி சந்ததியாக இந்நாட்டை யாளுவதற்கு எமக்கோ பிள்ளைப்பேறில்லாமையினுல், நான் இவ்வுலகவாழ்வை யொருவினவுடனே, நீங்கள் எமது பட்டத்து யானையைத் திட்டஞ்செய்து இப்பட்டினத்து வீதிவழியே நடத்திச் செல்லுங்கள்; அப்படிச்செலுத்தும்போது தெய்வபத்தியுடையவ னெவன் முதல் எதிர்ப்படுகிறானோ, அவனையே யானைமீதுவற்றி யழைத்துக்கொண்டு வந்துசிம்மாசனத்திலிருத்திமகுடாபிஷேகஞ்செய்து அரசனுகக் கொண்டு இராச்சியத்தைநடத்துங்கள்" என்று சொல்லிவிட்டு உயிர் நீங்கினன்; இறந்த அரசனுடைய ஈமக்கிரியைகளை முடித்துவிட்டு, மந்திரிமார் அப்படியே பட்டத்து யானையை அலங்கரித்து நடத்திக்கொண்டு போவாராயினர்; அரசன் சொன்ன இந்த இரகசியத்தை முந்தியேயறிந்த ஒருவன், யானை புறப்பட்டுப் போவதை யுணர்ந்து, காவியுடை விபூதி உருத்திராக்கமென்னு மிவைகளைத் தரித்துத் துறவிபோல் வேடம்பூண்டு, பட்டினத்தின் எல்லையிலுள்ள ஆற்றங்கரையில் நிற்கும் ஒரு அரசமர நீழலிற் சிவயோகத்திலிருப்பவன்போல் இருந்தான். அந்த ஆற்றங்கரைவரை யானையை நடத்திச் சென்ற அமைச்சர் அந்தப் போலிச் சந்நியாசியைக் கண்டு, அவன் முன்னிலையில் யானையைச் செலுத்திக்கொண்டுபோய், அத்துறவியை வணங்கி, விஷயத்தை விண்ணப்பஞ் செய்து யானைமேல் எழுந்தருளி மாளிகைக்கு வரும்படி இரந்தார்கள் துறவி தொடக்கத்தில் அரசனுதற்கு மறுத்தனனேனும் பின்னர் மந்திரிமார் வேண்டுகோளுக்கு ஒருவாறு இசைந்து யானைமீதேறிக்கொண்டு அரசமாளிகையை யடைதலும், மந்திரிமார் பிரதானிகள் முதலானோர் அவனை அரியணைமேல் இரு

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பு பெருகி அறநெறி ஓங்குக!

## இலங்கை மக்களுக்கு வேண்டுகோள்

### சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் செய்தி

இலங்கைமக்கள் தத்தமக்குளிருக்கும் பழைய பிணக்குகளையும், விவகாரங்களையும் மறந்து, வகுப்புவாதங்களையும் கட்சி வேறுபாடுகளையும் அடியோடு ஒழித்து, எங்கள் தாய்நாடு இனிது வாழப் பாடுபடல் வேண்டும் என்று சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கத் தலைவர் டக்ரர், ப. தில்லைநாதன் அவர்கள் சென்ற 5-2-48 இல் சிங்கப்பூர் வானொலி நிலையத்தின் மூலமாக, இலங்கைமக்களுக்கு விடுத்த செய்தியிற் குறிப்பிட்டார். அவர் பேசியதன் சாரம் வருமாறு:

சிங்கப்பூரில் வதியும் இலங்கைமக்களாகிய நாம் நம் தாய்நாடாகிய இலங்கை, அந்நிய ஆட்சியினின்றும் விலகி, விடுதலையடைந்து, சுதந்திரம் பெற்றதையிட்டு, மிகவும் களிப்பும் பெருமையுமடைந்து உங்களுக்கும் உங்கள் தலைவர்களுக்கும் எங்களது வாழ்த்துதலையும் சந்தோஷத்தையும் வானொலி மூலமாக அனுப்புகின்றோம்.

நமது இலங்கையன்னை சுதந்திரமடைந்த இந்நாள் இலங்கை மக்களாகிய நம் எல்லோருக்கும் ஓர் பெரிய விசேஷ நாளாகும். இப்புனிதநாள் இலங்கையன்னையின் சரித்திரத்தில் எந்நாளும் மிகப் பெருமைவாய்ந்து ஓங்கி நிற்கும்.

நாம் அநேக ஆண்டுகளாக போத்துக்கீசர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலியவர்களின் ஆட்சியினால் கட்டுப்பட்டிருந்தோம். நமது நாட்டில் பல தேசாபிமானிகள் காலந்தோறும் தோன்றி நமது சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார்கள். அவர்களது மனந்தளரா உழைப்பினாலும் இராசதந்திர விவேகத்தாலும் நமது தாய்நாடு சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து இன்று கொஞ்சமேனும் இரத்தம் சிந்தாமல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திடமிருந்து சுதந்திரம் பெற்றிருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நம்மவர்களின் சுதந்திர ஆர்வத்தையும் அவர்கள் சகல துறைகளிலும் முற்போக்கடைந்திருப்பதையும் நன்கறிந்து தானாகவே நமக்குச் சுதந்திரம்வழங்க முன்வந்திருக்கின்றது. இது நமது நாட்டின் தேசாபிமானிகளுக்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் அச்சாம்ராஜ்யத்தின் தலைவரான மன்னர்பிரானுக்கும் சொல்லொணாப் பெருமையையும் புகழையும் அளிக்கின்றது.

இலங்கை மக்கள் யாவரும் இவ்வரிய சம்பவத்தை சாதி, மதம், வகுப்பு வித்தியாசமின்றி ஒற்றுமைப்பட்டு ஒரேமனதாய் எம்பிரானைப் பிரார்த்தித்து உயர்விதமாய்க் கொண்டாடுவோம்.

பலகாலத்தின்பின் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாத்து ஓங்கி வளரச்செய்ய வேண்டியது நம் எல்லோருடையவும் கடமை.

நமதுநாடு "பிரிட்டிஷ் கொம்மன் வெல்து" (British Commonwealth) என்று சொல்லப்படும் ஐக்கியநாடுகளில் ஒன்றாய் ஆஸ்திரேலியா (Australia) கனடா (Canada) தென்னாபிரிக்கா ஐக்கிய நாடு (Union of South Africa) இந்தியா (India) போன்ற நாடுகளுடன் சமத்துவம் பெற்றிருக்கின்றது. நமதுநாடு இந்த ஐக்கியநாடுகளுடன் ஒத்துழைத்துவரின் பலவிதமான நன்மைகளை யடைய விருக்கின்றது.

இவ்வுலகின்கண்ணே சுதந்திரத்தோடு இருக்கின்ற பலநாடுகள் எப்படி எப்படி எவ்வெவ்வகையில் முன்னேற்றமடைந்திருக்கின்றனவோ, நாகரீகமடைந்திருக்கின்றனவோ, உயர்வடைந்திருக்கின்றனவோ, அவ்வவ்வகையில் நம்நாடு முன்னேற்றம், நாகரீகம், உயர்வு, செல்வாக்கு, சந்தோஷம் அடைய நம் தேசத்தவர்கள் பாடுபடவேண்டும். அவ்விதச் சிறப்பு வாய்ந்த நிலையை அடைந்து, பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா, சீனம் இவை போன்ற நாடுகளுடன் சமமாக நின்று, மறுநாடுகளுக்கும், மறுதேசத்தவர்களுக்கும், தொண்டாற்றக்கூடிய விதமாய் வரவேண்டும்.

இவைகளுக்காக நமது நாட்டில் பல கருமங்கள் நடத்தவேண்டியிருக்கின்றன. முதன்மையாக நம் நாட்டவர்கள் எல்லோருக்கும் மிகவும் போதியதும் பயன்படக்கூடியதுமான கல்வி கற்பிக்கப்படல்வேண்டும். கல்வியறிவினால் நம்மவர்களுக்குள் அகப்பகைமை நீக்கி ஒற்றுமை வளரச்செய்தல் வேண்டும்.

கல்வியறிவின் பயனாய் நமது பொதுமக்களிடம் காணப்படும் குறைகளைத்திருத்தி அவர்கள் தங்கள் நாட்டிற்கும் தமக்கும் நன்மை பயக்கக்கூடிய விதத்தில் உழைத்துச் சீவித்து நன்கு வாழச்செய்ய வேண்டும். நமது நாட்டில் பண்படுத்திப் பயன் பெறக்கூடிய இடங்களையெல்லாம் பண்படுத்திப் பயன்பெறவேண்டும்.

யாருக்கும் பயன்படாத அனாவசியமான பழக்கவழக்கங்களையும் சமூகக்குறைபாடுகளையும் நீக்கி மற்றும்நாகரிகமடைந்த நாட்டு மக்கள்போல் நாமும் நம்தேச நலனுக்கு இடைவிடாது பிரயாசைப்பட வேண்டும்.

இலங்கைமக்கள் தத்தமக்குளிருக்கும் பழைய பிணக்குகளையும் விவகாரங்களையும் மறந்து வகுப்புவாதங்களையும் கட்சி வேறுபாடுகளையும் அடியோடு ஒழித்து எல்லோருடனும் பரஸ்பர அன்போடு ஒத்துழைக்கவேண்டும். சிறு காரியங்களுக்காக ஒருவரோடொருவர் எதிர்ப்புக்காட்டி நாட்டின் சமாதானத்தைக் குறைக்கக் கூடாது. யாவரும் தன்னலம் கருதாது தேசநலத்தைக் கருதி சீவியம் நடத்த வேண்டும். நமது நாட்டில் இதுகாறும் நடமாடி வரும் பஞ்சப் பிணியையும் நோய்ப் பிணியையும் துயரத்தையும் போக்க வேண்டிய வழிகளை நம்நாட்டுத் தலைவர்கள் தேடிப் பரிகாரம் செய்யவேண்டும். நம் நாட்டவர்கள் தங்கள் தலைவர்களுடனும் பிரதான மந்திரிகளுடனும் மற்றவர்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## காந்திஜி காட்டியவழி

### அதன்படி நடவுங்கள்

இலங்கைப் பாராளுமன்றத் திறப்புவிழாவுக்கென, இந்தியாவின் ஐக்கியமாகாணத்தேசாதிபதி கவியரசி ஸ்ரீமதி சரோஜினிதேவி ஓர் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். அகிலத்தில் இன்று வேண்டியது அஹிம்சையே, அந்த அஹிம்சைக்காக, அன்புக்காக உயிர்வாழ்ந்து தனது ஆருயிரைத் தியாகம்செய்த காந்தியடிகள் போதனைகளைப் பின்பற்றி இலங்கை ஈடேறவேண்டுமென்று கவியரசியார் தம் செய்தியிற் குறிப்பிட்டிருக்கிறார். அவர் மேலும் தெரிவிப்பதாவது:-

"உங்களின் எழில் மிகுந்த தீவுமக்களுக்கு, விலை மதிப்பற்ற பரிசாக, புண்ணிய போதி விருட்சக்கன்று ஒன்றையும், புத்தபிரானின் அருள் மிக்க போதனைகளையும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியா அனுப்பியது. இன்று இந்தியா தனது சகோதரை இழந்த ஆழ்ந்த இதயத் துயரால் ஒருபுறம் வாடுகின்றதாயினும், உங்களின் அரசியல் விடுதலை கண்டு ஆனந்தக்களிப்பெய்துகிறது.

அன்பு, அஹிம்சை, சத்தியம் இவற்றிற்காக வாழ்ந்து இவற்றிற்காகவே மடிந்தார் மகாத்மாகாந்தி. அவரது உன்னத கோட்பாடுகளின் அடிப்படையில் மானிட வர்க்கத்திற்கு உங்களின் சுதந்திரத்தையும், உங்களின் சேவையையும் விரிந்தமுறையில் பயன்படுத்துவீர்களாக!

இந்த எங்களது ஆர்வம் நிறைந்த நம்பிக்கையைத் தவிர எங்களின் சுற்றத்தாராகிய உங்களுக்கு வேறு என்ன நல்ல ஆசியை நாங்கள் அனுப்பிவிட முடியும்!

## இலங்கைத் தேசிய கீதம்

[சுதந்திர தினத்தன்று (10-2-48) யாழ்ப்பாணம் முற்றவெளியிற் கூடிய கூட்டத்திற் படிக்கப்பட்டது. புலோலி மேற்கு, திரு. வே. சிவக்கொழுந்து ஆசிரியர் இயற்றியது]

ஜெய ஜெய லங்கா—ஸ்ரீ
வந்தேமாதரம்
ஜெய ஜெய லங்கா—ஸ்ரீ
வந்தேமாதரம்

தேனொடு பால்வகை
தித்திக்குங் கனிகளும்
வானவர் அமிழ்தென
வையத்தில் வழங்கிடும்
—ஜெய ஜெய லங்கா!

கண்கவர் பொழில்களும்
கற்பகத் தருக்களும்
எங்கணும் நிறைந்துள
எமதெழில் லங்காய்!
—ஜெய ஜெய லங்கா!

சிங்கள மக்களும்
சேர்ந்துள தமிழரும்
மங்களம் பொருந்துமுன்
மலரடி தொழுகுவம்,
—ஜெய ஜெய லங்கா!

பாரத சேய்களும்
பத்தர்நல் முகம்மதும்
ஆதரம் அளித்திடும்
அடியிணைப் பணிகுவம்.
—ஜெய ஜெய லங்கா!

பற்பல ஜாதியர்
பரிவுடன் நின்னடிப்
பொற்பதந் தனைநிதம்
போற்றியும் வணங்குவம்.
—ஜெய ஜெய லங்கா!

## இனி நமது பணி என்ன?

### இலங்கைப் பிரதமரின் பிரசாரணம்

சுதந்திர இலங்கைப் பாராளுமன்றத் திறப்புவிழா சென்ற செவ்வாய்க்கிழமை குளோஸ்டர் கோமகனால் ஆரம்பித்து வைக்கப்பட்டபின்னர் மண்டபத்துக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று, பிரதமர் திரு டி.எஸ். சேனநாயக்கா, சிங்கக்கொடியை ஆரோகணித்தார்; அதனை ஆரோகணிக்குமுன்னர் இலங்கை ஒருதுளி இரத்தமும் சிந்தாமல் சுதந்திரம் அடைந்துள்ளதைக் குறிப்பிட்டு, மேலும் கூறியதாவது:

"சரித்திர முக்யத்துவம் வாய்ந்த இம் மகத்தான சந்தர்ப்பத்தில் இலங்கை மக்களுக்கு நான் சில வார்த்தைகள் கூறுவது என் கடமையென எண்ணுகிறேன் இங்கு திரளாகக் கூடியிருக்கும் கூட்டமே எமது சரித்திரத்தில் மிகப் பெரிய கூட்டமாய் இருக்கலாம். ஆயினும் இலங்கைமக்களில் ஒருசிறு பகுதியினரே இவர்கள். ஆகவே, விஞ்ஞானமும் மனிதனது திறமையும் படைத்த யந்திர சாதனங்களை உபயோகித்து இலங்கைமுழுவதும் உள்ளபொதுமக்களுக்கு நான் பேசுகிறேன்.

மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் தமது தம்பியாரை தம் பிரதிநிதியாக இங்கு அனுப்பிவைத்தார். அவ்வருஞ் செய்கைக்கு இலங்கைமக்கள் சார்பில் எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன், கோமகனும் கோமகளும் ஊர் திரும்பியபின் புராதனப் பெருமை வாய்ந்த ஒரு தேசத்தின் சுதந்திரப் புனர் நிர்மாணத்துக்கு உதவி செய்ததை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்வார்கள் என எண்ணுகிறேன்.

நாம் சுதந்திர மக்களாக மீண்டும்மலர்ந்தோம் என்பதையிட்டு மகிழ்ச்சியடையாத அவ்வளவு [illegible] மாக்கள் இருந்தும் என நான் [illegible]

மேற்கத்திய வல்லரசுகளுடன் நாம் நமது சுதந்திரத்தைப் பாதுகாக்க மூன்று நூற்றாண்டுகள் போராடினோம். 1815-ம் ஆண்டு மார்ச் 2-ந் தேதி எமது சுதந்திரத்தின் கடைசிக் கோட்டையான கண்டியரசை நாம் பறிகொடுத்தோம். எமது அரசுரிமை பிரிட்டிஷ் மன்னரைச் சார்ந்தது. 1948 பிப்ரவரி 4-ந் தேதி இவ்வுரிமைகள் பிரிட்டிஷ் மன்னரால் இலங்கை மக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது,

ஒருதுளி ரத்தங்கூடச் சிந்தாமல் இவ்வதிகார மாற்றத்துக்கு அடிகோலியதையிட்டு நாம் பெருமையடைகிறோம. இரத்தஞ் சிந்துதல் இலங்கையின் பெருந்தொகைப் பௌத்தர்களின்மதத்திற்கே விரோதமானதாகும். பௌத்த மதத்தின் போதனைகளை நாம் உலகிற்கே பேணிவைத்தோம் என்று நாம் உரிமை கொண்டாட முடியும்; எமது மன்னர்கள் அதனைப் பாதுகாத்துக் காப்பாற்றச் சபதம் செய்தனர். பிரிட்டிஷ் அரசாங்கமும் அங்ஙனமே வாக்குறுதி தந்தது இருந்தபோதிலும் தனது நீண்ட சரித்திரத்தில் பௌத்தமதத்தின் சகிப்புத்தன்மை இதர மதங்களின் [illegible] மறுத்தது இடையாது. இன்று இது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நமது நாட்டின் அரசாங்கம், அதில் யார் அங்கம் வகித்தாலும் சரி, மத சுதந்திர உரிமையைச் சட்டரீதியாக மறுக்கமுடியாது, ஏனெனில் நாம் பெற்றிருக்கும் சுதந்திரத்தில் இது இணைந்து விளங்குகிறது.

யுத்தத்தில் நாம் ஜனநாயகம், மனிதத்தன்மை, சமாதானம் என்பவற்றுக்காகச் செய்த சேவைகளின் பயனாகவே நமது சுதந்திரம் கிட்டியிருக்கிறது என்று எண்ணுவதில் எமக்குப் பிரியம். பிரிட்டிஷ் ராஜீய நிபுணர்கள் நமதுசேவைகளை மெச்சினர். அதன்பயனே இவ்வதிகார மாற்றமாகும்.

பிரிட்டிஷ் ராஜீய சம்பிரதாயத்திற்குகந்த பிரகாரமே இவ்வதிகார மாற்றம் நடைபெற்றுள்ளது. கடந்த ஒன்றரை நூற்றாண்டுகால பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உள்நாட்டுப் பிணக்குக்கு அடிகோலிய ஒற்றுமை யின்மையானது ஒழிக்கப்பட்டது "மக்னா கார்ட்டாவில்" குறிப்பிட்ட விடுதலைக் கருத்துக்கள் அமுல் நடத்தப்பட்டன ஜனநாயக உரிமைகளைப் பேண நாம் கற்றறிந்துவிட்டோம். தனிமனிதன் சுதந்திரம், பாதுகாப்புரிமை சொத்துரிமை, மத சுதந்திரம், பேச்சுரிமை, ஆகியவற்றை நாம் உயர்வுடன்மதிக்கின்றோம்.

எமது அரசியல் சீர்திருத்தத்தில் நமது விவகாரங்களை நாமே பூரணமாக நிர்வகித்துக்கொள்ளக்கூடிய ஒருகட்டத்தையடைந்துவிட்டோம். ஒரு பிரிட்டிஷ் அரசியல் நிபுணர் நல்ல ஆட்சிகூடச் சுயாட்சிக்குச் சமமாகாது என்று கூறினார், அந்த உயர்ந்த கருத்து பிரிட்டிஷார் நமது அதிகாரத்தைத் திரும்பத் தருவதுமூலம் அங்கீகாரமாய் இருக்கிறது. இதனைக்கண்டு நாம் நமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இத்தீர்மா

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னர்பிரானின் ஆசியுரை

## குளோஸ்ரர் கோமகன் படித்தார்

ஏற்கெனவே அறிவித்திருந்தபடி, சுதந்திர இலங்கையின் முதற் பாராளுமன்றம் சென்ற செவ்வாய்க்கிழமை காலை 10½ மணிக்கு, மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் சார்பில, அவரது சகோதரர் குளோஸ்டர் கோமகனால் மிகவும் சிறப்பாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பெற்றது. அச்சமயத்தில் மன்னர்பிரான் இதற்கென அனுப்பியுள்ள செய்தியை குளோஸ்டர் கோமகன் படித்தார். அது பின்வருமாறு:—

இன்று இலங்கையின் சரித்திரத்தில் ஓர் விசேஷம் வாய்ந்த தினமாகும். அத்தகைய இத்தினத்திலே, நான் நேரே உங்கேவந்து உங்கள்முன்பேசமுடியாமை பற்று வருந்துகின்றேன். எனது சாம்ராஜ்பத்திலே ஏறக்குறைய ஒன்றரை நூற்றுண்டுகளாக ஓர் குடியேற்ற நாடாக இருந்து, இன்று மற்றும் சாம்ராஜ்ய நாடுகளுடன் சுதந்திரமாய், சமத்துவ நிலையில் அங்கம் வகிக்கும் நிலைக்கு இலங்கை வந்திருக்கிறது.

இலங்கையில் கொழும்பு நகரையும் மற்றும் டச்சுப் பிரதேசங்களையும் 1796 ம் வருடத்திலேயே டச்சுதேசாதிபதிகளங்களிடம் ஒப்படைத்தார். 1802 ம் வருடத்தில் நிறைவேறிய ஆமியன்ஸ் சமாதான உடன்படிக்கைக்குப் பின்னரேதான் அதன் நிபந்தனைகளின்படி, பல மாகாணங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்குள் வந்தன. 1815 ம் ஆண்டில் பிரிட்டிஷார் கண்டி மாகாணத்தினருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்பின் இலங்கை முழுவதும் எனது சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாகச் சேர்ந்து கொண்டது.

இலங்கையின் அரசியல் விவகாரத்தில் முன்னேற்றம் 1912 ம் வருடத்தில் ஆரம்பமாயிற்று. அதன்பயனாக சட்டசபைக்குப் பிரதிநிதிகள் தெரிந்தனுப்பும் முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதனால் அரசியல் விமோசனம் ஏற்பட்டது.

கல்வியறிவுள்ள இலங்கையின் பிரதிநிதியாக ஒரு தெரியப்பட்ட அங்கத்தவர் நியமிக்கப்பட்டார். தேசத்தின் நிர்வாகத்தில் இலங்கையர் காலத்துக்குக் காலம் பங்குபற்றி முன்னேற்ற மடைந்தனர். 1931 ம் வருடத்தில் டொனமூர் அரசியல் திட்ட அங்குரார்ப்பணத்துடன் பொறுப்பாட்சியையும் இலங்கை பெற்றது.

இலங்கையின் அரசியலில் மேலும் மாற்றங்களைச் செய்வதற்கு சோல்பரிபிரபு தலைமையில் 1944 ம் வருஷம்ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது, இச் சபையின் சிபார்சுகளின்படி கடந்த வருடம் இலங்கையின் பாராளுமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

பிரிட்டிஷ சாம்ராஜ்ய நாடுகளைப் போன்று இலங்கையும் இப்பொழுது பூரண பொறுப்பாட்சி நாடாக சுதந்திரத்தையடைந்துவிட்டது. டொமினியன் அந்தஸ்தை நீங்கள் அடைந்துவிட்டீர்கள் என்பதற்காக அதன் உரிமைகளையும் சலுகைகளையும் சந்தோஷத்துடன் கொண்டாட இங்கு கூடியிருக்கிறீர்கள். இலங்கை இன்று அடைந்துள்ள புதிய அரசியல்நிலை மாற்றத்துடன் எனது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் எனது இலங்கையரசாங்கத்துக்கு மிடையிலுள்ள தொடர்புகளையும் எனதுசாம்ராஜ்யநாடுகள் தொடர்பு மந்திரியிடம் ஒப்படைத்துவிட்டேன். எனது இலங்கைப் பிரதம மந்திரியின் ஆலோசனையின்பேரில் இலங்கையின் முதல் கவர்னர் ஜெனரலாக ஸர். ஹென்றி மாங்மேசன்மூர் அவர்களை நியமித்துள்ளேன்.

எனது பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சமாதானமான வழியிலும் சட்டரீதியிலும் இலங்கை தனது சுதந்திரத்தை அடைந்துள்ளது மிகவும் திருப்தியை அளிக்கும் விஷயமாகும். இலங்கையிலுள்ள எனது பிரஜைகளின் வருங்காலம் சுபீட்சமாக விளங்குமென்பது இவ்வுண்மையால் தெளிவாக விளங்குகின்றது. எனது இலங்கைப் பிரஜைகள் அடைந்துள்ள இச்சுதந்திரத்திற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு வருங்காலத்தில் நல்ல பலன்களை அடையக்கூடியதாக நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

இலங்கையில் எனது அரசாங்கத்தின் கொள்கைபற்றியோ, அல்லது பாராளுமன்றத்தின் இந்தக் கூட்ட நடவடிக்கைகளின்போது கொண்டுவரும் சட்ட அமைப்புகள் பற்றியோ நான் நீண்ட நேரம் பேசுவதற்கு விரும்பவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தின் முடிந்துபோன கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்திருந்தன. அப்பொழுது பாராளுமன்றத்தைக் கூட்டி தேசாதிபதி பேசியபோது எனது அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றியும் எனது மந்திரிகள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

தேசத்தின் மக்களது நிலைமைகளை அபிவிருத்தியடையச் செய்ய பலவகையிலும் தெளிவுபடுத்தப்பட்ட முடிவுகளையும், இப்பொழுதுள்ள அரசாங்க ஸ்தாபனங்களை திருத்தியமைப்பது பற்றியும் தேசத்தின் உற்பத்தி ஸ்தலங்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் தீர்மானங்கள் வெளியிடப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்; அத்தினத்திலே வெளியிடப்பட்ட கொள்கைப்படியே எனது அரசாங்கம் நடக்கும். டொமினியன் அந்தஸ்தை இலங்கை அடைந்துள்ளதுடன் சுதந்திரத்தை அடைவதினால் உள்ள நலன்களையும் பொறுப்புகளையும் எனது அரசாங்கம் முற்றாக உணர்ந்துள்ளது. தேசத்தின் செல்வநிலையை அபிவிருத்தியடையச் செய்வதன் மூலம் பொதுமக்கள் சுபீட்சவாழ்வுக்கு அடிகோலுவதன் மூலம் இப்பொழுது கிடைத்துள்ள சுதந்திரத்தை எனது அரசாங்கம் உபயோகிக்கும்.

நல்ல கட்டுப்பாடுகள் அமைந்த அரசாங்கத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதாலும், உலகில உள்ள எல்லா சுதந்திரநாடுகளுடனும் ஒத்துழைப்பதாலும் சமாதானத்தையும் மக்கள் முன்னேற்றத்தையும் பாதுகாப்பதன் மூலம் தனது புதிய பொறுப்புகளை அரசாங்கம் நிர்வகிக்கத் தீர்மானித்துள்ளது.

எனது அரசாங்கம் தனது பல முயற்சிகளையும் நடைமுறைக்குக் கொண்டுவந்து அனுஷ்டிக்கவேண்டிய சட்டங்களை உங்கள்முன் நேரமும் தருணமும் வரும் பொழுது சமர்ப்பிக்கப்படும்.

இவ்விஷயங்கள் முற்றையும் உங்களது மிகவும் கவனமான ஆலோசனைக்கு உட்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களது நன்முயற்சிகளில் இறைவன் வழிகாட்டியாக இருக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

## யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்

இலங்கைப் பாராளுமன்றத் திறப்பு விழா யாழ்ப்பாணத்திலும் சென்ற செவ்வாய்க்கிழமை குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்று காலை கச்சேரியில் இக்கொண்டாட்டம்பற்றி அன்னதானம் வழங்கப்பட்டது,

பின்னேரம் முற்றவெளியில் பள்ளிக்கூட மாணவ மாணவிகள் பவனிவந்து குழுமினர். அவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

இதன்பின், மாகாணத் தலைவர் திரு. பீ ஜே ஹட்ஸன் இலங்கையின் புதிய அந்தஸ்துபற்றியும், இனிப் பிரஜைகளாகிய எமது கடமைபற்றியும் ஓர் பிரசங்கம் செய்தார், வடபகுதிக் கல்வி யுத்தியோகத்தர் திரு. வி கே நாதன் தமிழிற் பிரசாரணம் செய்தார். கதம்பக்கச்சேரி நிகழ்ந்தபின் முற்றவெளிக் கொண்டாட்டங்கள் முடிவடைந்தன. பின்னர் கரையூர்க் கடற்கரையில் வாணவேடிக்கைகள் நிகழ்ந்தன.

## ஸ்ரீ அரவிந்தர் செய்தி

கடாக்கிலுள்ள திரு கும்பி என்பவர் காந்திஜி மரணசம்பந்தமாக "பாபுஜியின் மரணத்தின் பின்னுல் இருளும், துயரும் பரவுகின்றன. மக்கள் செய்வதொன்றுதெரும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றனா" என்று கோரி, புதுச்சேரியில் தவக்கோலத்தில் இருக்கும் ஸ்ரீ அரவிந்தருக்கு ஓர் தந்தி அனுப்பினுர். அதற்கு ஸ்ரீ அரவிந்தர் அனுப்பியுள்ள பதில் வருமாறு: "இருளினூடே உறுதியுடன் நிற்க ஒளி இருக்கிறது, அது வெற்றியடையும்.

## இனி நமது பணி என்ன?

3-ம் பக்கத் தொடர்ச்சி)

னம் நமது நட்பை மேலும் மேலும் பலப்படுத்தி சூரிய சந்திரர் உள்ளவரை அதை நிலைநிறுத்த உதவிசெய்யும் என நான் எண்ணுகிறேன்.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தில் அங்கமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ளோம். இது எம் சுதந்திரமுடிவு. ஆனால் முன்போல பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்குக் கீழ்ப்பட்டிராமல அவர்களுடன் சம அந்தஸ்துள்ள பங்காளிகளாக விளங்குவோம். உள்நாட்டு விவகாரத்திலாகட்டும, அயல் நாட்டு விஷயங்களிலாகட்டும் சுதந்திரமாகவே இருப்போம். அவர்களுடன் நாமும் பிரிட்டிஷ் முடிக்கு விசுவாசம் செலுத்தி வருவோம்.

சுதந்திரத்துடன் பல முக்கிய பொறுப்புக்களும் உண்டாகின்றன. இனிமேல் முன்னர்போல் நிர்வாகப்பிழைகளை மற்றவர்கள்மீது சுமத்த முடியாது. ஆகவே இலங்கைப் பிரஜை ஒவ்வொருவனும், முயற்சியுடன் வலிந்துழைத்து நாட்டின் செழிப்பையும் சந்தோஷத்தையும் வளர்க்க முயலவேண்டும். நமது தேசம் பல வித ஜாதியினரைக் கொண்டது. இவர்களுக்குத் தனித்தனியான கலைப்பண்பும், சரித்திரமும் இருந்துவருகிறது. இவைகள் எல்லாவற்றிலும் உயர்ந்தவற்றை ஒன்றுசேர்த்து மிகச் சிறந்த பண்புகளை நாம் அடையவேண்டும், அத்துடன் உலகின் இதரநாடுகளும் சமாதானம் பாதுகாப்பு, நீதி என்பவற்றைச் சகல மக்களுக்கும் ஏற்படுத்தும் பணியில் நாம் ஒன்றுபடவேண்டும்.

## அன்புபெருகி அறநெறி ஓங்குக

3ம் பக்கத் தொடர்ச்சி

களுடனும் நாட்டுநன்மைக்காக ஒத்துழைக்கவேண்டும்.

வெளித் தேசங்களாகிய மலாயா, சிங்கப்பூர், பர்மா, இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வசிக்கும் ஒவ்வொரு இலங்கையரும் தமது நாட்டின் பெருமைக்குத் தக்கவாறு தம் வாழ்வை உயர்த்திப் பெருமையோடும் மரியாதையோடும் சீவித்துவரவேண்டும். இவ்வண்ணம் நம் யாவரும் நம் வாழக்கையை உயர்த்த முன்வருவோமானால், நம் தாய்நாடாகிய இலங்கையன்னை வெகுசீக்கிரம் உலகெங்கும் புகழ்பெற்று உயர்ந்த சிகரத்தையடைவாள் என்பது திண்ணம்.

சிங்கப்பூரில் இதுகாறும் நம்மோடு சேர்ந்து குழைந்து உறவோடு சீவித்துவரும் மற்றும்தேசச் சகோதரர்களான இந்தியர்களும் சீனர்களும் மலாய்க்காரரும் ஐரோப்பியரும் மற்றவர்களும் எங்களது சுதந்திரக் கொண்டாட்டத்தில் இவ்விடம் பங்கெடுத்துக்கொண்டு அவர்கள் நமது தாய் நாட்டில் வதியும் உங்களுக்கும் உங்கள் தலைவர்களுக்கும் மந்திரிமார்களுக்கும் கவர்ணருக்கும் தங்கள் வாழ்த்துதலையும் சந்தோஷத்தையும தெரிவிக்கின்றார்கள்,

நம்நாட்டு மக்கள் யாவரும் சமாதானமாயும் ஐக்கியமாயும் ஒருமித்திருந்து ஒருவிதத் துயருமின்றி செல்வாக்குடனும் சந்தோஷத்துடனும் இன்புற்று வாழவும் நம் நாடு சிறப்புற்று ஓங்கவும் எல்லாம்வல்ல இறைவனை நாம் யாவரும் இச்சுதந்திர வைபவ நாளில் வணங்கிப் போற்றுவோமாக!

நமது இலங்கையன்னைக்கும் உங்கள் எல்லோருக்கும் சகல மங்களம் உண்டாகுக. சுபம்.


# நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பதிப்புப் புத்தகங்கள் எங்களிடத்திற் கிடைக்கும் வாங்க விரும்புவோர் ஏககாலத்தில் (25) இருபத்தைந்து ரூபாவிற்குக் குறையாமல் புத்தகங்களை வாங்குதலாகும்.

வண்ணார்பண்ணை 11—2—43.

மனேஜர்
சைவப்பிரகாச யந்திரசாலை

## விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | கந்தப்புராணம் செய்யுள் | 9 | 60 |
| 2 | கந்தப்புராண வசனம் | 6 | 00 |
| 3 | திருக்குறள் உரை | 6 | 00 |
| 4 | பெரியபுராண செய்யுள் | 6 | 00 |
| 5 | திருவிளையாடற் புராண செய்யுள் | 4 | 20 |
| 6 | பாரதம் ஆதிபர்வ உரை | 4 | 20 |
| 7 | சேதுபுராணம் | 3 | 60 |
| 8 | திருக்கோவையார் உரை | 3 | 60 |
| 9 | தொல்காப்பியம் சேனாவரையம் | 3 | 60 |
| 10 | இராமாயணம் பாலகாண்டம் | 3 | 00 |
| 11 | நன்னூற்காண்டிகையுரை | 4 | 20 |
| 12 | நன்னூல் விருத்தியுரை | 4 | 20 |
| 13 | அருட்பா | 2 | 10 |
| 14 | கோலைமறுத்தலாதி | 1 | 80 |
| 15 | பெரியபுராண வசனம் | 3 | 00 |
| 16 | திருவிளையாடல் வசனம் | 2 | 40 |
| 17 | சைவசமய நெறியுரை | 1 | 50 |
| 18 | நாவலர் சரித்திரம் | 1 | 50 |
| 19 | இலக்கணச் சுருக்கம் | | 90 |
| 20 | திருமுருகாற்றுப்படையுரை | | 40 |
| 21 | அபிராமியந்தாதி உரையுடன் | | 30 |
| 22 | சிவ லய தரிசன விதி | | 25 |
| 23 | நான்காம் பாலபாடம் | 1 | 50 |
| 24 | இரண்டாம் சைவவினாவிடை | | 80 |


## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

8-2-48 ல் நடைபெற்ற யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நிருவாகசபைக்கூட்டத்தில் கீழேகாட்டப்பட்டிருக்கும் அநுதாபத்தீர்மானங்கள் நிறைவெய்தியன,

1 நமது பாரதமாதாவின் தாதாவாகவும், அகிம்சா மூர்த்தியாகவும் இவ்விருபதாம் நூற்றாண்டில் உலகில் திகழ்ந்த மகாத்மாகாந்தியடிகள் பிரிவைக் குறித்து எங்கள்சபை மிகவும் அநுதாபப்படுகின்றது.

2 சைவ சித்தாந்த பண்டிதராகவும் சைவப் பிரசாரகராகவும் தொண்டுபுரிந்து 29-1-48 ல் அன்று சிவபதம் அடைந்த ஏழாலை திரு. ஐ. பொன்னையா அவர்கள் பிரிவைக் குறித்து இச்சபை மிகவும் அநுதாபப்படுகின்றது.

மு. மயில்வாகனம்
காரியதரிசி

## 4 கோடி ரூபா மீதம்

1947-ம் வருட அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களின் மொத்தவரி வருமானம்சுமார் ரூ. 127,356,673 ஆகக்கணிக்கப்பட்டிருக்கிறது. செலவான தொகை மொத்தம் ரூபா 84,955,973ஆகும். இதன் பயனாக 4 கோடி 24 லட்சத்து 700 ரூபா மீதப்பட்டிருக்கிறது.

## இடதுசாரிகள் பகிஷ்காரம்

இலங்கைச் சுதந்திரவிழாவை, பாராளுமன்றத்தில் உள்ள இடதுசாரிக்கட்சியினர் பகிஷ்காரம் செய்தனர்.

## பதில் நன்றியுரைகள்

கிளாஸ்டர் கோமகன் சிங்காதனப் பிரசங்கம் முடிந்ததும் செனட்சபை அரசாங்கக்கட்சித் தலைவரும், பிரதிநிதிகள்சபை அரசாங்கக்கட்சித் தலைவரும பதில் நன்றியுரைகளைக் கூறினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2 ம்பக்கத் தொடர்ச்சி

த்திப் பட்டாபிஷேகஞ் செய்து முடி சூட்டித் தங்கள் அரசனைக்கொண்டு அவனுடைய ஆஞ்ஞைப்படி நடப்பாராயினர்: அந்த நாட்டிலுள்ள மக்களும் அவனைத் தங்கள் அரசனை மதித்து அன்பும் வணக்கமும் பாராட்டி யொழுகுவாராயினர்; போலித் துறவியாகிய தன் அரசபதவியைப் பெற்றமையையும், தனக்கு மக்கள் செய்யும் வணக்கத்தையும்பற்றி ஒருநாள் இரவு அந்த அரசன் தன்படுக்கையிற் கிடக்கும்போது சிந்தித்தான்; அவனுடைய உள்ளத்தில் உடனே ஞானம் பிறந்தது. "தடித்த உலகப்பற்றேயொழிய எள்ளளவும் தெய்வப் பற்றில்லாதேனாகிய நான் போலியாகச் சந்நியாசி வேடம்பூண்டமையினாலே இந்த நாட்டிற்கு அரசனானேன்; சகலசெல்வங்களையும் அதிகாரத்தையும் மக்கள் மதிப்பையும் பெற்றேன்; போலி வேடத்தைப் பூண்டமையினால் இப்படியான பெருமைகளைப் பெற்ற நான் மனப்பூர்வமான துறவியாக மாறுவேனேல், உலகத்திலுள்ள மன்னரும் தேடிவந்து என் அடி பணிவார்களல்லரோ! உண்மைத் தவத்தையிட்டி நானும் மறுமையில் இறைவனடி சேரலாகுமல்லவா? இந்த மாயப் பிரபஞ்சமாகிய சேற்றிற் கிடந்து அழுந்துவதை விடுத்து இறைவனருளால் நான் நிசமான துறவியாதல்வேண்டும்" என்று நிச்சயித்தான்: அன்றிரவுமுழுவதும் அவன் உறங்கிலன்; விடிந்ததும் அவன் எழுந்து தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு போசனமருந்தி வழக்கம்போல் அத்தாணி மண்டபத்தை யடைந்து, அங்குவந்து கூடிய மந்திரிகள் பிரதானிகள் மற்றைப் பரிவாரங்களிலுள்ளாரெல்லாருக்கும் தன்னுடைய பூர்வ வரலாற்றையும் தான் அப்பொழுது கொண்டுள்ள மேலான நோக்கத்தையும் உள்ளபடி யெடுத்துச் சொல்லி, இராச்சியபாரத்திலிருந்து தன்னை மீட்டுவிடும்படி கேட்டான். கேட்டோரனைவரும் ஆச்சரியமடைந்தனர்; அதன் பின்னரும் சிலகாலமேனும் இராச்சியப் பொறுப்பை நிர்வகித்துக் கொள்ளும்படி அவனை வேண்டினார்கள். "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதுண்டோ" என்று சொல்லி அவன் ஒருகணமேனும் அரசனாகவிருக்க உடன்படாது மறுத்துவிட்டுத் துறவுபூண்டு அந்நகரத்திலுள்ள அரசமரத்தின் கீழிருந்து தெய்வத்தைத் தியானிப்பானாயினன்; மந்திரிகள் அதுகண்டு முந்திய அரசவம்சத்திலேயுள்ள வேறொருவனைத் தகக்கள் அரசனாக்கி அந்நாட்டின் பரிபாலனத்தை நன்கு நடாத்தினார்கள்; அரசியல் விஷயமாகவும் வேறு விஷயமாகவும் தங்களுக்கு நேரும் சந்தேகங்களையெல்லாம் ஆற்றங்கரையிலிருக்கும் அத் துறவியிடம் போய்ப்போய் முறையிட்டு அவன் சொல்லும் புத்தியைக்கேட்டு இனிது நடந்தார்கள் என்பது கதை. என்னுயிர்த் துணைவரே, எதற்காக இதைச் சொன்னேனென்றால், அகத்திலே தூயகுணம்ஒழுக்கமில்லாது புறத்தேமாத்திரம்நடித்தொழுகுபவரையும் நாம் அகமும் புறமும் தூயரென்று நம்பி நடந்தால், எங்கள்நம்பிக்கைமூலமாக அவர்கள் உண்மையான தூயராதலுங்கூடுமென்பதற்கு உதாரணமாகச் சொன்னேன்: தங்களுக்கு நான் கதை சொல்ல முற்பட்டதாகிய என் துணிவைப் பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று இன்புறச் சொல்லிமுடித்தாள் இல்லக்கிழத்தி. வரும்

## சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

### பணம் உதவியோர் விபரம்

| | |
|---|---|
| முன்கணக்குப்படி | 4962 50 |
| ஸ்ரீமதிகள்: | |
| T நல்லம்மா | 25 00 |
| A செல்லையா | 1 00 |
| A வேலுப்பிள்ளை | 3 00 |
| A பொன்னம்மா | 2 50 |
| A பராசக்தியம்மா | 2 50 |
| A துரைசிங்கம் | 1 00 |
| V நாகம்மா | 3 00 |
| தம்பியையா | 2 00 |
| V. சோமசுந்தரம் | 2 00 |
| S E நடேசன் | 2 00 |
| C மனோன்மணி | 2 00 |
| S செல்லம்மா | 1 00 |
| S பருவதம்மா | 2 00 |
| A அன்னபூரணம் | 10 00 |
| S அன்னபூரணம் | 2 00 |
| M வேலுப்பிள்ளை | 2 00 |
| M இராமநாதன் | 1 50 |
| C சோமசுந்தரம் | 2 00 |
| R செல்லமுத்து | 2 00 |
| T சிவசுப்பிரமணியம் | 2 00 |
| S தவமணி | 2 00 |
| T பொன்னையா | 1 00 |
| A S காசிப்பிள்ளை | 2 00 |
| M பராசசிங்கம் | 5 00 |
| S வல்லிபுரம் | 2 00 |
| T கனகம் | 2 00 |
| I சரஸ்வதி | 1 00 |
| R சின்னையா | 1 00 |
| R கண்மணியம்மா | 2 00 |
| S தம்பையா | 2 50 |
| S வன்னியசிங்கம் | 2 50 |
| T பார்வதிப்பிள்ளை | 2 00 |
| N சுப்பிரமணியம் | 1 00 |
| T நாகம்மா | 1 00 |
| K தம்பு | 2 00 |
| K K நடராசன் | 2 00 |
| சரவணை தம்பையா | 1 00 |
| T பூரணம் | 1 00 |
| A அன்னம்மா | 2 00 |
| K இராசம்மா | 1 00 |
| V பொன்னுச்சாமி | 2 00 |
| செல்லத்துரை | 5 00 |
| S சிவசுப்பிரமணியம் | 2 00 |
| K கந்தையா | 5 00 |
| K சிவக்கொழுந்து | 3 00 |
| S காவேரியம்மா | 5 00 |
| S T இரத்தினசபாபதி | 5 00 |
| V இராசம்மா | 5 00 |
| K பாக்கியலெட்சுமி | 2 00 |
| M தில்லையம்மா | 10 00 |
| சண்முகலிங்கம் | 2 00 |
| S கனகசபை | 5 00 |
| N கனகம்மா | 2 00 |
| K S S சுப்பிரமணியம் | 2 00 |
| தியாகராஜா | 1 00 |
| பசுபதிச்செட்டியார் | 5 00 |
| V சுந்தரராசா | 5 00 |
| M தம்பியையா | 5 00 |
| P ராஜலட்சுமி | 2 00 |
| M சிவக்கொழுந்து | 2 00 |
| P சரஸ்வதி | 5 00 |
| S பூமணி | 5 00 |
| V முத்தையா | 3 00 |
| S புவனேஸ்வரி | 5 00 |
| S குலசிங்கம் | 2 00 |
| M விஜயம்மா | 2 00 |
| N K சின்னையா | 2 00 |
| V அப்பையா | 10 00 |
| R அன்னலெட்சுமி | 2 00 |
| V முத்துத்தம்பி | 5 00 |
| சிவசுப்பிரமணியம் | 3 00 |
| M சுப்பையா | 2 00 |
| சின்னத்துரை | 2 00 |
| V பொன்னுத்துரை | 50 |
| சில்லறை வசூல் | 2 00 |
| ஆகக் கூடியது | 5194 50 |

தி. இராசநாயகம்
தனாதிகாரி

M 226—20-12.48 13-2-48

## நூல்களைப்பற்றிய குறிப்பு

### பூகோளம் (முதலாம்பாகம்)

இது, யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நீடித்தகாலம் தலைமையாசிரியராகவிருந்த திரு. K. இளையதம்பி உபாத்தியாயரவர்கள் 5ம் வகுப்பிற்கென எழுதிய பூகோளத்தின் எட்டாம் பதிப்பாகும்; இதன்கண் தேசப்படங்களும், அவற்றோடு சம்பந்தப்பட்ட சித்திரங்களும் வேண்டிய இடங்களிற் பொறிக்கப்பட் டிருக்கின்றன; பாடங்களின் இறுதிதோறும் வினாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன; பிரதி தெளிவான அட்சரங்களில் இச் சைவப்பிரகாச யந்திரசாலையிலேயே அச்சிடுவித்து நன்கு கட்டடப்பட்டுள்ளது: மேற்படி ஆசிரியர் புதல்வர்களால் வெளியிடப்பெற்றுள்ளது; இது ஐந்தாம் ஆறும் வகுப்பு மாணவர்க்கு உபயோகமாகும்படி ஆக்கப்பட்டுள்ளது; விலை ரூபா 1 சதம் 65. பிரதிகள் யாழ்ப்பாணத்திலும்இலங்கையின் ஏனைய பிரபல புத்தகசாலைகளிற் பெறலாம்.

○

### பாரதீயம் (சிற்றிலக்கணம்)

இது பாடசாலைக் கீழ்வகுப்பு மாணவர்குத் தமிழ் இலக்கணம் பயிற்றுதற்குப் பயன்படும்வண்ணம் புதியமுறையில் எழுதப்பட்ட இலக்கண நூலாகும். இதன் ஆசிரியர் பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்; பாடங்களின் இறுதிதோறும் அப்பியாசங்களும் பரீட்சை வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன; வெள்ளையான காகிதத்தில் தெளிவாக அச்சிடப்பெற்றுள்ளது; இதன் பதிப்புரிமையாளர் யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத புத்தகசாலை யதிபர்களாவர்; பிரதியொன்றன் விலை ரூபா 1 ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலையிலும், யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பட்டினங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பிரதிகள் பெறற்பாலன.

○

### சுதந்திரன் (பொங்கல் மலர்)

இது கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியாகிய சுதந்திரன் பொருட்டு, சென்ற தைப்பொங்கல் காலத்தில் விசேஷமாக வெளியிடப்பட்ட வெளியீடாகும்; இதன்கண் அறிஞர்களால் எழுதப்பட்ட அரிய வியாசங்கள் காணப்படுகின்றன; இம்மலர் முகப்பிற் பொங்கல் சம்பந்தமான வர்ணச் சித்திரம் விளங்குகிறது; யாழ்ப்பாணத்துள்ள புகையிலைத் தோட்டம், இலங்கையின் மலைப்பாகத்துள்ள ரபர்தோட்டம், கீரிமலைத் தீர்த்தக்கேணி முதலியவற்றின் பிரதிமைப் படங்களும் இவ் வெளியீட்டில் அடங்கியுள்ளன.

○

### திருப்பந்தணை நல்லூர்த் திருப்பதிகம்

காவிரிநதியின் வடகரையிலுள்ள தலங்களுள் 35 வதாக வைத்து மதிக்கப்படும் தலம் இத்திருப்பந்தணைநல்லூர் உலகமாதாவாகிய தேவியார் விசிய பந்து வந்தணைந்த இடமாதலின் இத்தலம் இங்ஙனம் காரணப் பெயர்பெற்றதெனச் சொல்லப்படும்; சுவாமியார் பெயர் பசுபதீசுவரர்; தேவியார்நாமம் பன்னதோளியார். இத் தலத்திற்கு ஆளுடைய பிள்ளையாரும், அப்பர் சுவாமிகளும் பாடிய தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றுள்ளன: தருமபுர ஆதீனத்தில் இப்பொழுதுள்ள மகாசந்நிதான மவர்கள், வழக்கம் போல் இத்தலத்திற்குரிய தேவாரப் பதிகமிரண்டினையும் பொருள் விளக்கத்தோடு அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள்; இது மேற்படி ஆதீனத்தார் வெளியீட்டின் 159ம் பிரசுரமாகும்,

மேலே குறிக்கப்பட்ட புத்தகப் பிரதிகள் பத்திரிகைப் பிரதியென்னுமிவற்றை எமது பார்வைக்கு அனுப்பியதன்பொருட்டு நன்றி கூறுகின்றேம்.

## NOTICE OF SALE
### விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 16642 ம் இலக்க ஈட்டு வழக்கில் சகசாம் ஸூ கார்த்திகை மீ 18 ந் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப் படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும்காணி சகசஅஸூ பங்குனி மீ சு ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் நாலுமணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

வண்ணார்பண்ணை மேற்கு விஞசி தம்பு —வழக்காளி

எதிராக

ஷையூர் 1 கந்தன் மாரியனும் பெண் 2 சின்னாச்சியும் — எதிரிகள்

எதிராளிகள் வழக்காளிக்குக் கொடுக்கவேண்டிய தொகையின் விபரம் ரூபா 395 65ம் இன்னும் ரூபா 700 க்கு 1941 ம் ஆண்டு வைகாசி மாதம் 6 ந் திகதி துவக்கம் 1941 ம் ஆண்டு ஆனி மாசம் 10 ந் திகதி வரைக்கும் வருசம் ஒன்றுக்கு 100க்கு 12 வீத வட்டியும் அதற்குப்பிறகு முழுத் தொகைக்கும் 1941 ம் ஆண்டு ஆனி மாசம் 0 ந் திகதி துவக்கம் இறுக்கும் வரைக்கும் வருசம் ஒன்றுக்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 92 10 ம்.

விபரம்

வண்ணார்பண்ணை மேற்கு இறை "மணலியோடையும் மறுபிரிவுகளும்" நில பரப்பு ஆறு (6) இதில் மேற்குப் பக்கமாக நிலப் பரப்பு நாலும் வீடும் கிணற்றுப் பங்கும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு விஞசி சிதம்பரனுக்கும் பெண்தங்கத்துக்கும் ஆறுமுகத்தான் ஐயனுக்குமுடைய ஆதனங்கள். மேற்கு பொன்னர் பெண் சின்னனுக்குடைய ஆதனம் தெற்கு கந்தன் முருகனுக்கும் பெண் ஆசைக்குமுடைய இதில் மிகுதியான வாதனம்.

பொ. இராசரத்தினம்
வண்-வட-மேற்கு கொம்மிஷனர்
யாழ்ப்பாணம் 6.2.48

M 230 13

## திருச்சி ரேடியோ

திங்கள் பிப்ரவரி 16

7 15கீதாரம்பம் 7 20தமிழில்செய்திகள் 7 30 திருவாரூர் எஸ் பாலகிருஷ்ணன் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 5 புதிய பாடல்கள் 8 30 ஏ ராமசாமி ஐயங்கார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 0 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஏ ராமசாமி ஐயங்கார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஏ ராமசாமி ஐயங்கார் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

5 திருவாரூர் எஸ் பாலகிருஷ்ணன் நாகஸவரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 காளையார் கோயில் எம் எஸ சண்முகசுந்தரம் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 தொழில் உற்பத்திப் பெருக்கம் 8 காளையார் கோயில் எம் எஸ சண்முகசுந்தரம் பாட்டு. 8 30 பஞ்சரத்னம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 கே ஜே ஜேசுதாஸ 10 இசை வேளை 10 30 முடிவு.

செவ்வாய் பிப்ரவரி 17

காலை 7 1 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி முருகேசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் இசைத்தட்டு 8 30 டி பி சிவசங்கரம் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி முருகேசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி முருகேசன் பாட்டு 2 15கல்விஒலிபரப்பு2 45 முடிவு

மாலை 5 டி பி சிவசங்காம் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7 45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம்பிள்ளை வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல் வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 கே வி காளிதாஸ் பாட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் ஊத்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



## தந்தரோக சஞ்சீவி கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும். முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30 6.48 (வெ)



## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிலேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.
இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std. 7-8 29 1-8—30-4



## நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம் கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம், சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களிலுண்டு

Std 22 6-6-47—6-6-48


# இயற்கை

முதலாம் பக்கத் தொடர்ச்சி

லின் இவற்றையெல்லாம் சம்பந்தப் படுத்துதற்குரிய ஒற்றுமைநயம் பொருள்களிடத்தே வியாபித்திருத்தல் செவ்விதிற் புலப்படும். இவ்வொற்றுமை நயமே திருவருட்சத்தி. இச் சத்தி உலகத்துக்கெல்லாம் வித்தாயுள்ள மாயையை இயக்கி அவ்வியக்கம் காரணமாகப் பல பேதப்பட்ட உலகத்தைத் தோற்றுவிக்கும். இவ்வுலகத்தை மாயையை முதற்காரணமாகக் கொண்டு இறைவன் இயக்கும் கிரமத்தை நாம் ஆராய்வோமாயின் இறைவனது உண்மை எமக்கு நன்கு புலனாகும். முதலிலே இறைவனுடைய திருவருட்சத்தி சுத்த மாயையைக் கலக்க ஓர் நாதம் தோன்றுமென்றும், அந்த நாதத்தானே சத்தப் பிரபஞ்சமென அழைக்கப்படுமென்றும், அந்தச் சத்தப் பிரபஞ்சங் காரணமாகவே அர்த்தப் பிரபஞ்ச மெல்லாம் தோன்றின என்றும் அந்தச் சத்தப் பிரபஞ்சத்திற் றோன்றிய முக்கியபாகமே மந்திரவடிவாக வெளிக்கொண்டன என்றும் இதுபற்றியே அம்மந்திரங்களைச் செபித்தலினால் பற்பல சித்திகள் காணப்படுமென்றும் சமயசாத்திரங்கள் கூறும். மந்திர உச்சரிப்பினால் சித்திகள் பிறத்தலை யாரும் இனறைக்கும் காணலாம்.

பௌதிக சாத்திரத்திற் சமர்த்தமுடைய பண்டிதர்கள் திரவியங்களிற் காண்டற்குரிய விநோத நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி அவ்வளவிற்றும் மகிழ்வர். இவ்விநோத நிகழ்ச்சிகளை நுண்ணறிவு கொண்டு யாம் ஆராய்வோமாயின், இவற்றுக்கெல்லாம் காரணம் திரவியங்களை இயக்கத்தக்க ஓர் சித்சத்தியின் குணவிசேஷமே என்பது நன்கு புலப்படும். மாயை காரணமாகத் தோற்றும் தத்துவபேதங்களனைத்திற்கும் ஓர் தத்துவகர்த்தா வுளரென்றும், அதுபோலவே தத்துவங்கள் காரணமாகத் தோன்றும் தாத்துவிகப் பொருள்கள் தமக்கும் ஓர் அதிதேவதை யுண்டென்றும் சமய சாத்திரங்கள் விளக்கிக் காட்டும். இது பற்றியே மண் முதலிய ஐம்பூதங்கட்கும் ஓர் அதிட்டான தெய்வம உண்டென்றும் அத்தெய்வங்களின் சத்தியே அவற்றால் அதிட்டிக்கப்பட்ட பொருள்களிடத்து வியஞ்சகமாவதென்றும் சமயசாத்திரங்களகூறும். சூரியன் முதலிய அண்டவடிவங்களின் மாத்திரமன்றி இரும்பு, பொன முதலிய லோகங்களினும் மாணிக்கம் வைடூரியம் முதலிய இரத்தினங்களினும ஓர் சித்துப் பொருளின் சத்தி அதிட்டித்துள தென்றும் அச்சத்தியின் குணவிசேடமே அப்பொருள்களிடத்தும் செறிந்து விளங்குவதென்றும சாத்திரங்கள் வாயிலாக நாம் அறியலாம், இச்சித்சத்தியின் அதிட்டானமே திரவியங்களின் விநோத மரபுகட்கெல்லாம் காரணமென்பது இவ்விஷயத்தை நுனித்து நோக்குவார்க்குப் புலப்படாமற் போகாது. திரவியங்களிடத்துள்ள சித்தாற்றலை யெல்லாம் சேட்டிப்பவன் இறைவனேயாகலின் சடப்பொருள்கள் வாயிலாக அவற்றை அதிட்டித்துள்ள சித்துப்பொருள்களையும் அச்சித்துப்பொருள்கள் வாயிலாக அவற்றை அதிட்டித்து நிற்கும் இறைவனையும் காணும் காட்சியே உண்மைக் காட்சி எனப்படும். இந்தக் காட்சியை ஓர் அளவைக்குக் கண்டவர்கள் தாமே உலகத்தில் சித்திகளைப் புரிவது. அதாவது, உலகம அனைத்துக்கும் ஆதாரமாயுள்ள இறைவனை அந்த உலகவாயிலாக எந்தஅளவுக்கு ஒருவன் காண்பதுண்டோ அந்த அளவிற்கு அவன் உலகத்திலே சித்திகளைச் செய்யக் கூடும். பௌதிகவிநோதங்களைச்செய்வார்தாமும அப் பௌதிகங்களிலே இறைவனது சித்சத்தியின் சேட்டையைக் கண்ட அளவாகத்தானே விநோத சித்திகளைச் செய்ய வல்லவராவர். அவர்களது காட்சி பௌதிகப்படி அளவாமாயின் அவர்கள்செய்தற்குரிய விநோதங்களும் அப்பௌதிகப்படி அளவினதாகவே இருக்கும். அவர்களது காட்சி பௌதிகப்படிக்கு மேலுள்ள சீவப்படி அளவினதாமாயின் அந்தச் சீவ ஆற்றலுக்கமைந்த விநோதங்களைச் செய்யும வன்மை அவர்க்குண்டாம். இக்காட்சி சீவப்படிக்கு மேலுள்ள சிவப்படி யளவினதாமாயின் அவர் எல்லாங்கடந்தபரம சித்தியாகிய முத்தியைப் பெறுவர். இதுபற்றியே எமது சாத்திரங்கள் தத்துவங்களையெல்லாம் ஆன்ம தத்துவம் வித்தயாதத்துவம், சிவதத்துவம் என்னும் மூவகையின் வகுத்துக் காட்டும. பௌதிகப்படியின்கணுள்ளார் பௌதிகங்கள் காரணமாகப் பெறத்தக்க சித்திகளைச்செய்ய சீவப்படிக்கணுள்ளார் தமது சீவ சிற்சத்தியைத் துணைகொண்டு காணத்தக்கதாகிய யோகக் காட்சியின் வல்லுநராவர். இந்த யோகக் காட்சியின் முதிர்ச்சியுற்றவர்கள் தாமே அட்டமாசித்திகளினும் வல்லவராவர். யோகிகளது சீவக்காட்சி எவ்வளவுக்கு முதிர்ச்சியுறுமோ அவ்வளவாக அவர் பல அதிசய விநோதங்களை இயற்றும் சக்தி உள்ளவராவர். இவ்வாறே இந்தச் சித்துலகஆராய்ச்சியை நாம் நுணுகிச் செய்வோமாயின் உலகத்திலுள்ள சித்தாற்றற் சேட்டையும் அதற்குக் காரணமாகிய இறைவனது உண்மையும் நன்கு புலப்படும்.

# பரமனை அறிவிக்கும் பக்தி நூல்கள்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கும் பயன் உண்டாகும். மந்திரங்கள் உச்சரிப்பவருக்குமட்டும் பயன் தரும். மந்திரங்களை உச்சரிக்கும்போதுதவறு உண்டாகலாம். அதனால் தீங்கும் நேரலாம். தோத்திரங்களால் நன்மையே உண்டாகும். 'வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தான்' என்றும், 'நாவார நம்பனையே பாடப் பெற்றோம்' என்னும் நாவரசர் வாயின் இயல்பையும், நாவின் தன்மையையும் நன்றாகக்காட்டியுள்ளார். 'இருள் சேர் இருவினையும் சேரா, இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' எனப் பொதுமறை கூறுகின்றது.

ஆதலின் பதி நூல்களாகிய தேவாரம் முதலிய தோத்திர நூல்களையும், சிவஞானபோதம் முதலிய தோத்திர நூல்களையும் பக்தியுடன்பயின்று பயன் பெறுவோமாக.—சித்தாந்தம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்,

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, February 13. 1948

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org